# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் **2023–ம்** வருடம் ஜனவரி மாதம் **31–ம்** தேதி காலை **10.30** மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

**பொருள் எண்:1**

நகராட்சிப் பகுதியில் சேகரமாகும் குப்பைகளை சேகரிக்க வெளிக்கொணர்வு முகமை மூலம் பணி மேற்கொள்ள அரசாணை எண்.116 ந.நி.ம.கு.வ.துறை நாள் 24/08/2022-ல் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் அறிவுரைகளின்படியும் இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 32945/2022/சி1, நாள் 30/11/2022-ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 10/01/2023 ஆம் தேதிய ந.க.எண். 32945/2022/EA2-SWM-15 உத்தரவில் பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளின் கீழ் குப்பைகள் உருவாகும் இடங்களிலேயே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித் தனியாக பிரித்து சேகரம் செய்து மறு சுழற்சி செய்யும் இடத்திற்கு கொண்டு வர ஒரு டன்னிற்கு ரூ.4680.40 என நிர்ணயம் செய்து இது குறித்து நிர்வாக அனுமதி வழங்கி ஒப்பந்த நிறுவனத்தை மூன்று ஆண்டுகளுக்கு தேர்வு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்பணியை மேற்கொள்ள பத்மனாபபுரம் நகராட்சிக்கு ஆண்டு ஒன்றிற்கு சுமார் ரூ.152.02 இலட்சம் செலவாகும் என்பதினால் இத்தொகையை பொது நிதி மற்றும் 15th CFC Tied Grant-லிருந்து செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இதன் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும், இதற்காக ஏற்படும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1468/2022/சி1)
அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.
**மன்றத் தீர்மானம் எண். 137**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.
**பொருள் எண்:2**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் எண்.TN75Z9748 (SML)ற்கு தகுதி சான்று புதுப்பித்துக் கொள்ள RTO அலுவலகத்திற்கு கட்டணம் ரூ.9000/-னை பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதி இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:-பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.544/2022/அ2)
**மன்றத் தீர்மானம் எண். 138**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:3**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் எண். TN75B4577 பழுது பணிகள் மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 20000/- னை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பொது சுகாதார அவசர

அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1410/2017/அ2)

**மன்றத் தீர்மானம் எண். 139**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:4**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் எண். TN75P 9346 (Ecomet) வாகனத்துக்கு சில பழுது பணிகள் மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ. 32000/- னை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1256/2013/அ2)

**மன்றத் தீர்மானம் எண். 140**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:5**

பத்மனாபபுரம் நகராட்சியின் வார்டு 1 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் வீடுகள் தோறும் கழிவுகள் பிரித்து வாங்குவதற்கு அவசர அவசிய தேவையின்படி இரண்டு மின்கல வாகனங்கள் பழுது பார்க்க தோராய செலவினம் ரூ.160000/-ற்கு (ரூபாய் ஒரு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:-நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண். 32945/2022/EA2/SWM/15 நாள் 10/01/2023இல் இரண்டு மின்கல வாகனம் பயன்படுத்தி குப்பை சேகரம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 115/2023/அ2)

**மன்றத் தீர்மானம் எண். 141**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:6**

பத்மனாபபுரம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கொசு ஒழிப்பு பணிக்கு வீடுகளுக்குள் புகைபரப்பும் இயந்திரம் 2 மற்றும் வெளிப் பகுதிகளில் புகைபரப்பும் இயந்திரம் 1 என மூன்று புகை பரப்பும் இயந்திரங்களும் பழுது நீக்கம் செய்யும் பொருட்டு பொது சுகாதார பணிகளின் அவசர, அவசியம் கருதி கீழ்காணுமாறு (உள்ளூர் மற்றும் வெளியூர்) விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண். | நிறுவனம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1, | V.V.R. டிரேடர்ஸ், திருநெல்வேலி | 26,000/- |
| 2, | ஸ்ரீவினாயகா எண்டர்பிரைசஸ், சென்னை | 29,000/- |
| 3, | துர்கா டிரேடர்ஸ், திருநெல்வேலி | 30,700/- |

மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள V.V.R. டிரேடர்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனத்திற்கு பணி செய்ய பொது சுகாதார அவசிய, அவசரம் கருதி அனுமதிக்கப்பட்டது.

மேலும் பணி நல்ல முறையில் முடித்து பட்டியல் தொகை G.S.T உட்பட ரூ.29,120/-க்கு சமர்ப்பித்துள்ளார். எனவே பட்டியல் தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண். 142**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்: 7**

பத்மனாபபுரம் நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் தமிழக அரசின் கசடு கழிவு மேலாண்மை அரசாணை எண். 182, 183 நாள் 31/12/2022 வெளியீட்டின்படி கசடு கழிவு மேலாண்மை குறித்து வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கு அ.கு:- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண். அ2/106/2023)

**மன்றத் தீர்மானம் எண். 143**
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்:8**

இந்நகராட்சி பொது சுகாதார வாகனம் எண். TN74 Z 2536, TN74 D 6288,(ம) , TN74- 4394 ஆகியவற்றை கழிவு நீக்கம் செய்து சாலையில் இயங்க முடியாத வாகனம் என சான்று பெறும் பொருட்டு மார்த்தாண்டம் வட்டார போக்குரத்து அலுவலருக்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

மேற்கண்ட 3 வாகனத்திற்கும் பசுமை வரி (ம) அதற்கான கூட்டுத் தொகை நிலுவை விவரம் கீழ்க்கண்டவாறு ரொக்கமாக செலுத்தப்பட்டது. .

| வ.எண். | வாகனம்எண் | Green Tax | Period | Compounding amount | Total Amount |
|---|---|---|---|---|---|
| 1. | TN 74 6288 | 2525 | 26-08-2018 to 05-08-2023 | 1000 | 3525 |
| 2. | TN 74 4394 | 5050 | 12-02-2013 to 01-02-2023 | 1000 | 6050 |
| 3. | TN 74 22536 | 2020 | 07-07-2019 to 06-07-2023 | 1000 | 3020 |
| | | | **Total** | | **12595/-** |

எனவே மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அவசர அவசியம் கருதி தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 549/2009/இ1)

**மன்றத் தீர்மானம் எண். 144**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:9**

பத்மனாபபுரம் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தூய்மை பணியாளர்களுக்கு தூய்மை பணிகள் மேற்கொள்வதற்கு வேண்டிய தளவாட சாமான்களன் பின்வருமாறு**.**

| வ.எண். | பொருள் | எண்ணிக்கை | தோராய செலவு ரூ. |
|---|---|---|---|
| 1, | மண்வெட்டி (நீண்ட மர கைப்பிடியுடன் | 15(1 - ரூ.565/-) | 8475/- |
| 2, | ஓடை சுத்தம் செய்யும் | 10(1 - ரூ.285/-) | 2850/- |

| | | | |
|---|---|---|---|
| | அகப்பை (நீண்ட கைப்பிடியுடன்) | | |
| 3 | பிக்காஸ் (நீண்ட பைப்பிடியுடன்) | 10(1- ரூ. 700/-) | 7000/- |
| 4 | நீண்ட கைப்பிடியுடன் கூடிய துடைப்பம் | 30(1- ரூ.240/-) | 7200/- |
| 5 | தென்னை ஈகிள் துடைப்பம் | 60(1- ரூ.55/-) | 3300/- |
| 6 | கை உறை | 60ஜோடி(1- ஜோடி ரூ. 185/- | 11100/- |
| 7 | ஹெல்மெட் | 30 (1- ரூ.395/-) | 11850/- |
| 8 | ஒளிரும் தன்மையுடைய மேலாடை | 60( 1- ரூ. 230/-) | 13800/- |
| 9 | பிளாஸ்டிக் அண்ண கூடை (கழிவு எடுக்க) | 30(1- ரூ.245/-) | 7350/- |
| | | **மொத்தம்** | **72925/-** |

மேற்படி பொது சுகாதார அவசர, அவசியம் கருதி தளவாட பொருட்கள் தோராயமான செலவின ரூ. 73,000/- வாங்குவதற்கு மன்ற அனுமதிக்கு.

(ந.க.எண். 116/2023/அ2)

**மன்றத் தீர்மானம் எண். 145**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:10**

பத்மனாபபுரம் நகராட்சியால் 1998-1999-ம் ஆண்டு தக்கலை பேட்டை சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் திரு.ற்றி. கிருஷ்ணசுவாமி என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. உரிமதாரர் உரிம தொகை ரூ. 13,50,500/- செலுத்தப்பட்ட தொகை நீங்கலாக நிலுவை தொகை ரூ.1,50,500/- செலுத்தாத காரணத்தினால் நகராட்சியால் பலமுறை அறிவிப்பு செய்யப்பட்ட நிலையிலும் செலுத்தாத காரணத்தால் நீதி மன்ற நடவடிக்கை தொடர வேண்டிய நிலையில் வழக்கு எண். O.S.No.36/2002-ன் படி வழக்கு தொடரப்பட்டு நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு பெறப்பட்டது. நீதி மன்ற தீர்ப்பின்படி நிலுவைத் தொகை ரூ. 1,50,500/- மற்றும் வட்டியுடன் வழக்கு செலவினையும் வசூல் செய்ய நிறைவேற்று மனு தாக்கல் செய்ய வேண்டி உரிமதாரரின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் விபரம் கேட்கப்பட்டதற்கு தோவாளை வட்டாட்சியர் தனது கடிதம் ஓ.மு. அ1/13935/2004 நாள் 27/07/2005-ன் படி தோவாளை வட்டத்தில் சொத்தும் ஏதுமில்லை என தெரிவித்துள்ளார். நாகர்கோவில் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண். 9019/2005/அ6, நாள் 13/12/2005-ன் படி திரு. கிருஷ்ணசுவாமி பெயரில் வரிவிதிப்புகள் ஏதுமில்லையென தெரிவித்துள்ளார். அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் தனது கடிதம்ஓ.மு. எண். ஆ4/10461/2006 நாள் 14/07/2006-ன் படியும் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் உரிமதாரர் பெயரில் நஞ்சை, புஞ்சை நிலம் இல்லை எனவும், வாடகை வீட்டில் ஏழ்மை நிலையில் குடும்பம் நடத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். எனவே இவ்வாறு அசையும் சொத்து மற்றும் அசையா சொத்துக்கள் ஏதும் இல்லாத நிலையில், நிறைவேற்று மனு பதிவு செய்திட கடந்த காலத்தில் இயலவில்லை. எனவே நீண்ட காலமாக நிலுவையாக உள்ள தவணைத் தொகை ரூ.1,50,500/-யை வசூலிக்க வழிவகை எதுவும் இல்லாத காரணத்தால் மேற்கண்ட தொகையினை வஜா செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு;- தற்போதைய நிலையில் உரிமதாரர் எங்கு வசிக்கிறார் என்ற விவரம் அறிய இயலவில்லை. மேலும் மேற்படி நிலுவை தொகை சுமார் 22 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளதாலும் உரியவரிடமிருந்து வசூல் செய்ய வழிவகை இல்லாத நிலையில் ரூ. 1,50,500/-ஐ வஜா செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 780/1999/அ2)

**மன்றத் தீர்மானம் எண்.146**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.
**பொருள் எண்:11**

பத்மனாபபுரம் நகராட்சிக்குச் சொந்தமான தக்கலை காமராஜர் பேருந்து நிலையத்தில் வந்து போகும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மரியதாஸ் என்பவருக்கு ஓர் ஆண்டுக்கு உரிமம் தொகை ரூ. 211864/-க்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு வைப்புத் தொகை ரூ.5.00 லட்சம் பெறப்பட்டது. உரிமம் தொகையைவிட கூடுதலாக வைப்பு தொகை செலுத்தப்பட்டதாலும் ஓர் ஆண்டுக்கு உரிமம் வழங்கப்பட்டதாலும் வைப்புத் தொகையிலிருந்து கழித்து மீதி தொகை திருப்பி வழங்க திரு. மரியதாஸ் என்பவர் நாள் 27/12/2022ல் விண்ணப்பம் செய்துள்ளார். எனவே உரிமதாரருக்கு ஓர் ஆண்டுக்கு மட்டும் உரிமம் வழங்கப்பட்டுள்ளதால் வைப்புத் தொகையிலிருந்து நகராட்சிக்கு செலுத்த வேண்டி குத்தகை உரிமம் தொகை மற்றும் ரூ. 25000/- வைப்புத் தொகையினை பிடித்தம் செய்து விட்டு மீதி தொகையினை திருப்பி வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 1250/2020/அ1)
**மன்றத் தீர்மானம் எண்.147**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:12**

நகராட்சி பேருந்து நிலையத்திற்குள் அமைந்துள்ள Septic Tank -ற்கான இடம் திருமதி.லைலா என்பவருக்கு சொந்தமான இடம் என குறிப்பிட்டு நகராட்சியை எதிர்த்து பத்மனாபபுரம் உரிமையியல் நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு O.S.No. 383/2001-ன் தீர்ப்பின் மீதான நடத்து மனு (EP 39/15)ல் சொல்லப்பட்ட சொத்தினை ஒழிப்பித்து எடுப்பதற்கு வாதி தரப்பில் EA 3/2022, EA 4/2022 ஆகிய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு பெறப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து நகராட்சி சார்பில் சென்னை உயர் நீதி மன்ற மதுரை கிளையில் CRP No 2550/2022 மற்றும் 2551/2022 ஆகிய வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. மதுரை கிளையில் திரு. ஆதிமூல பாண்டியன் வழக்கறிஞரால் வழக்கு நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி வழக்கின் முக்கியத்துவம் கருத்தில் கொண்டு கூடுதல் தலைமை அரசு வழக்கறிஞர் திரு. வீரகதிரவன் அவர்களை நகராட்சி சார்பில் கூடுதலாக வழக்காட கேட்டுக் கொள்ளப்பட்டது. 19/12/2022 அன்று நேரில் ஆஜராகி வாதாடியமைக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ. 55000/- கேட்டுள்ளார். இத்தொகை நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கப்பட்டதற்கும், மேலும் இவ்வழக்கு தொடர்பாக ஏற்படும் செலவுகள் அனைத்தும் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) வழக்கின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவு செய்யப்பட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். ற்றி.பி.ஐ/4105/2001)
**மன்றத் தீர்மானம் எண்.148**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.
**பொருள் எண்:13**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.20789/2021/UPA நாள் 08/11/2022ன் படி நகராட்சிப் பகுதியிலுள்ள தெரு ஓர வியாபாரிகளின் வாழ்வாதாரம் மேம்படுத்துவதற்கு ஏதுவாக இந்நகர் பகுதியிலுள்ள 10 பயனாளிகளுக்கு உருட்டு வண்டி வழங்க (Vending Carts) ரூ.8.24 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே 10 பயனாளிகளை தேர்வு செய்து உருட்டு வண்டி வாங்கி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு:- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.845/TPI/2022)
**மன்றத் தீர்மானம் எண்.149**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:14**

2021-2022 ஆம் ஆண்டு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மருந்து கோட்டை உரக்கிடங்கு பகுதியில் ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் எரிவாயு தகன மேடை பணி மேற்கொள்ளப்பட்டு நிறைவடையும் நிலையில் உள்ளது.

அரசாணை எண், 228, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, நாள் 13/11/2008 ன் படி மாநகராட்சி/நகராட்சி (ம) பேரூராட்சிகளில் கட்டி முடிக்கப்பட்ட நவீன எரிவாயு தகன மேடையை பராமரிக்க தனியார் அறக்கட்டளை (ம) தனியார் நிறுவனங்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நிபந்தனைகள்**

1)மாநகராட்சி/நகராட்சி (ம) பேரூராட்சிகளில் கட்டி முடிக்கப்பட்ட எரிவாயு தகன மேடை பராமரிப்பிற்கு தனியார் அறக்கட்டளை (ம) தனியார் நிறுவனங்களுக்கு மாநகராட்சி/நகராட்சி (ம) பேரூராட்சியின் மன்ற அனுமதி பெற்று வழங்கலாம்.

2)எரிவாயு மயானம், காரியங்கள், இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்த காரியங்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தக் கூடாது. எந்த சட்ட விரோத நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெற கூடாது.

3)ஒலி பெருக்கிகளை அறக்கட்டளை/நிறுவனம் பயன்படுத்தக் கூடாது. இந்த இடத்தை பயன்படுத்துவது சம்மந்தமாக சென்னை மாநகராட்சி ஆணையர்/நகராட்சி நிர்வாக ஆணையர் பேரூராட்சிகளின் ஆணையர் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் இதர சட்ட விதிமுறைகளுக்கும் அறக்கட்டளை/நிறுவனம் கட்டுப்பட வேண்டும்.

4)மேற்படி இடத்திலுள்ள பொருட்கள் ஏதேனும் களவாடபட்டிருந்தாலோ அல்லது எந்த வகையிலும் சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு பராமரிக்கும் நிறுவனமே முழுப் பொறுப்பாகும்.

5) எயூட்டும் இயந்திர புகைப் போக்கிகள் புகை வெளியேறுவதால் சுற்றுப்புற சூழ்நிலைகளை பாதிக்காத வகையிலும் தக்க உயரத்திலும் மாசு கட்டுப்பாட்டு வாரிய நிதிமுறைகளின்படி பராமரிக்கப்பட வேண்டும்.

6)மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி தேவைப்படுமென கருதும் பட்சத்தில் மேற்படி அனுமதி மற்றும் தடையில்லா சான்றை உள்ளாட்சி சொந்த பொறுப்பில் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

7) நவீன மயானத்தினை பயன்படுத்துவோர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை மன்றத் தலைவர்/ஆணையாளர்/செயல்அலுவலர் சுகாதார பிரிவு அதிகாரி (ம) நிறுவனத்தை சார்ந்த ஒருவர் கொண்ட குழு ஒவ்வொரு வருடமும் நிர்ணயிக்கலாம். இக்கட்டணம் இலாப நோக்கமின்றி செலவுகளை சரிக்கட்டும் விதமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

8) ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பொது எரிவாயு மயானாக பயன்படுத்திட வேண்டும்.

9)எரிவாயு மயானத்தைச் சுற்றி தோட்டம் அமைத்தல், செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல், காவல் அரண் அமைத்தல் மற்றும் மயானத்தைச் சுற்றி மதிற்சுவர்

எழுப்புதல் ஆகிய செலவினங்களை தனியார் அறக்கட்டளை/நிறுவனம் ஏற்க வேண்டும்.

10)எரிவாயு மயானத்தில், அறக்கட்டளை/நிறுவனம் எந்தவித கூரை வேய்ந்த கட்டிடமோ அல்லது எளிதில் தீப்பற்றக் கூடிய பொருட்கள் கொண்ட கூரையோ கண்டிப்பாக அமைக்கப்பட கூடாது.

11)எரியூட்டும் சடலம் தொடர்பாக பின்னாளில் எழும் சட்டப் பிரச்சினைகளுக்கு நிறுவனமே பொறுப்பேற்க வேண்டும்.

12)முதன் முதலில் பராரிப்பு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து 3 வருட காலத்திற்கு மட்டுமே எரிவாயு மயான பராமரிப்பு அறக்கட்டளை/தனியார் நிறுவனம் பராமரிக்க அனுமதிக்கப்படும். காலநீட்டிப்பு தேவைப்படின் ஆறுமாத காலத்திற்கு முன்பாகவே சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பத்தினை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் புதுப்பித்து/ நிராகிரித்து ஆணை பிறப்பிக்க வேண்டும்.

13)பராமரிக்க ஒப்படைக்கப்பட்ட பிறகு கூடுதல் கட்டுமானம் ஏதும் தேவைப்படின் உள்ளாட்சியின் அனுமதி பெற்றே வேலைகள் செயல்படுத்த வேண்டும். பராமரிப்பு அனுமதி முடிந்த பிறகு திருப்பி ஒப்படைக்கும் பொழுது இதற்கு எந்தவித இழப்பீடும் உள்ளாட்சி வழங்காது.

14)அறக்கட்டளை/நிறுவனத்தினர் பராமரிப்பை நிறுத்திக் கொள்ள விரும்பினால் மாநகராட்சி/நகராட்சிக்கு ஆறுமாத காலத்திற்கு முன்பே அறிவிப்பு முறையாக வழங்க வேண்டும்.

15)பராமரிப்பு அனுமதியை புதுப்பித்தும், மறுப்பதும் உள்ளாட்சியின் முடிவை பொறுத்தது.அனுமதி மறுக்கப்பட்டால் சம்மந்தப்பட்ட தனியார்/ அறக்கட்டளை/தனியார் நிறுவனங்கள், தாங்கள் நிறுவிய அனைத்து கூடுதல் உபகரணங்கள்/ கட்டங்களுக்கு எந்தவித இழப்பீடும் கோராமல் உள்ளாட்சி நிறுவனத்திற்கு ஒப்படைக்க வேண்டும்.

16) எரிவாயு மயானம் அமைக்க உரிமம் பெற்ற தனியார் நிறுவனம்/அறக்கட்டளை இறந்தவரின் பெயர் தகப்பனார் பெயர், வயது, முகவரி, எரிவாயு மயானம் பயன்படுத்தப்பட்ட நாள் மற்றும் நேரம் பெறப்பட்ட தொகை முதலிய விபரங்கள் அடங்கிய பதிவேட்டினை பராமரிக்க வேண்டும்.

17)மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தையும் சம்மதித்து ஒப்பந்த பத்திரம் உள்ளாட்சிக்கு அறக்கட்டளை/நிறுவனம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

18) மேலே உள்ள நிபந்தனைகளில் எந்த ஒரு நிபந்தனையாவது மீறப்பட்டாலும் வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தனியர் அறக்கட்டளை/தனியார் நிறுவனங்கள் ஒப்படைப்பு செய்யும் பொருட்டு உரிய மேல் நடவடிக்கைக்காக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:-1)நகராட்சி மூலம் நவீன எரிவாயு தகன மேடையினை பராமரிக்க தகுதியான பணியாளர்கள் இல்லை. எனவே தனியர் தொண்டு நிறுவனம் மூலம் பராமரிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.இதற்கான கட்டணம் நிர்ணயம் செய்யவும் மன்ற அனுமதிக்கு.

2)முதல் கட்ட நடவடிக்கையாக நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு பராமரிப்பு செய்ய பொது தொண்டு

நிறுவனங்களிடமிருந்து உரிய விருப்ப கடிதம் சமர்ப்பிக்க கேட்டு நாளிதழில் விளம்பரம் செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1110/2021/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.150**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:15**

இந்நகராட்சிக்குட்பட்ட 10-வது வார்டு கோனார் தெருவில் சிறுபாலம் கட்டும் பணிகள் மேற்கொள்ள ரூ.1.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.1222/2022/இ1)
அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண்.151**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:16**

பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதியில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பைப்லைன் விஸ்தரிக்கும் பணி நடைபெற்றது. பணி மேற்கொள்ளும் பொழுது பழுதடைந்த சாலைகளை செப்பனிட 2022-2023 ஆண்டு(TURIP) திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 24826/2022/SSI, நாள் 26/12/2022-ன் படி நகராட்சிப் பகுதிகளில் பழுதடைந்த 10.173 கி.மீ நீளமுள்ள கீழ்க்கண்ட சாலைகளை செப்பனிட 447.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 20/01/2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

| ` | Ward No | Name of Road/Street/Lane | Estimate Amount in Lakh |
|---|---|---|---|
| | | Package-1 | |
| 1 | 10 | Restoration of BT in konnar Road | 26.33 |
| 2 | 7 | Restoration of BT in Palace Road 2 | 11.29 |
| 3 | 7 | Restoration of BT in Palace Road 1 | 3.99 |
| 4 | 8 | Restoration of BT in Park Road | 9.41 |
| 5 | 3 | Restoration of BT in Saralvilai Street 7 | 4.97 |
| 6 | 8 | Restoration of BT in Padmanabhapuram East Car Street | 18.65 |
| 7 | 8 | Restoration of BT in Padmanabhapuram South Car Street | 24.95 |
| 8 | 8 | Restoration of BT in Padmanabhapuram West Car Street | 18.73 |
| 9 | 5 | Restoration of BT in Vettikonam Road 1a | 2.20 |
| 10 | 19 | Restoration of BT in Irattai Street 2 | 10.98 |
| | | TOTAL | 131.50 |
| | | Package-2 | |
| 11 | 8 | Restoration of BT in Padmanabhapuram North Car Street | 25.00 |

| | | | |
|---|---|---|---|
| 12 | 5 | Restoration of BT in APMA Street 2 | 11.82 |
| 13 | 8 | Restoration of BT in North Street 9 | 12.16 |
| 14 | 17 | Restoration of BT in Eraniel Cross Street1 | 15.06 |
| 15 | 20 | Restoration of BT in Thenkarai Street 2 | 8.35 |
| 16 | 20 | Restoration of BT in Thenkarai Street 3 | 3.64 |
| 17 | 10 | Restoration of BT in Keezhakulam Street 3 | 9.68 |
| 18 | 10 | Restoration of BT in RC Church Road 1a | 10.29 |
| | | | 96.00 |
| | | **Package-3** | |
| 19 | 19 | Restoration of Concrete Pavement in Milagupettai Road | 3.12 |
| 20 | 5 | Restoration of Concrete Pavement in Vettikonam Street 7 | 4.28 |
| 21 | 11 | Restoration of Concrete Pavement in Kumaranthittai Street1 | 8.68 |
| 22 | 19 | Restoration of Concrete Pavement in Nanthavanathuvilai Street | 12.96 |
| 23 | 21 | Restoration of Concrete Pavement in Melancode Road 1 | 12.22 |
| 24 | 19 | Restoration of Concrete Pavement in RC Street 7 | 1.99 |
| 25 | 19 | Restoration of Concrete Pavement in Ottrai Street 1 | 8.64 |
| 26 | 2 | Restoration of Concrete Pavement in CSI Church Road | 2.28 |
| 27 | 7 | Restoration of Concrete Pavement in Ramaswamy Kovil Lane 5 | 1.52 |
| 28 | 7 | Restoration of Concrete Pavement in Kalpadi Street 1 | 2.39 |
| 29 | 10 | Restoration of Concrete Pavement in Cheeti Street 7 | 0.81 |
| 30 | 16 | Restoration of Concrete Pavement in Bharathi Nagar Street 2 | 2.99 |
| 31 | 16 | Restoration of Concrete Pavement in Gandhi Nager 2C | 2.57 |
| 32 | 8 | Restoration of Concrete Pavement in Ramaswamy Kovil Lane 2 | 1.32 |
| 33 | 8 | Restoration of Concrete Pavement in Ramaswamy Kovil Lane 3 | 0.69 |
| 34 | 2 | Restoration of Concrete Pavement in Vettukattuvilai Street 2A | 2.42 |
| 35 | 2 | Restoration of Concrete Pavement in Vettukattuvilai Street 3 | 2.14 |
| 36 | 10 | Restoration of Concrete Pavement in Keezhakulam Street 2A | 1.78 |
| 37 | 10 | Restoration of Concrete Pavement in Keezhakulam Street 3B | 3.62 |
| 38 | 12 | Restoration of Concrete Pavement in Gnaniyar Street 3 | 1.27 |
| 39 | 19 | Restoration of Concrete Pavement in Asanparai Road | 5.62 |
| 40 | 19 | Restoration of Concrete Pavement in Onapparai Street | 0.48 |
| 41 | 2 | Restoration of Cement Concrete Pavement in Saralvilai Street 6 | 2.81 |

| | | | |
|---|---|---|---|
| **42** | **14** | Restoration ofCement Concrete Pavement in Mullai Nagar Road | **17.33** |
| **43** | **15** | Restoration of Cement Concrete Pavement in Ramanparambu Road 1 | **13.39** |
| **44** | **20** | Restoration of Cement Concrete Pavement in Thenkarai Street 1 | **2.99** |
| **45** | **9** | Restoration of Cement Concrete Pavement in Perumalkulam Street 2 | **13.91** |
| **46** | **9** | Restoration of Cement Concrete Pavement in East Fort Road | **22.18** |
| **47** | **7** | Restoration of Cement Concrete Pavement in Ramaswamy Kovil Street 2 | **11.59** |
| **48** | **14** | Restoration of Cement Concrete Pavement in Mullai Nagar Street 4 | **6.85** |
| **49** | **19** | Restoration of Cement Concrete in RC Street 5 | **3.16** |
| | | | **178.00** |
| | | **Package-4** | |
| **50** | **5** | Restoration of Paverblock in Vettikonam Street 6 | **3.05** |
| **51** | **9** | Restoration of Paverblock in North Street 7 | **4.12** |
| **52** | **9** | Restoration of Paverblock in North Street 2 | **6.43** |
| **53** | **11** | Restoration of Paverblock in Perumal Kovil Street 5 | **2.31** |
| **54** | **11** | Restoration of Paverblock in Perumal Kovil Street 7 | **4.46** |
| **55** | **12** | Restoration of Paverblock in Gnaniyar Street 1c | **0.84** |
| **56** | **21** | Restoration of Paverblock in Kumari Balan Street 1 | **2.35** |
| **57** | **21** | Restoration of Paverblock in Kumari Balan Street 1b | **1.36** |
| **58** | **21** | Restoration of Paverblock in Kumari Balan Street 1c | **0.63** |
| **59** | **11** | Restoration of Paverblock in Arasuvilai Street 4 | **6.98** |
| **60** | **16** | Restoration of Paverblock in Eraniel Rd Street 5 | **6.80** |
| **61** | **20** | Restoration of Paverblock in Kumarakovil Street | **2.67** |
| | | Total | **42.00** |

**மன்றத் தீர்மானம் எண்.152**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:17**

இந்நகராட்சிக்குட்பட்ட 6-வது வார்டு கொல்லகுடிமுக்கில் தடுப்பு சுவர் மற்றும் வடிகால் மேல்மூடி மற்றும் விவேகானந்தா தெருவில் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள ரூ. 1.30 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு:- மன்றம் அனுமதிக்கு

(ந.க.எண்.1368/2022/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.153**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:18**

இந்நகராட்சிக்குட்பட்ட புலியூர்குறிச்சி நந்தினி உணவகம் அருகில் கதவு எண். 6-40ஏ5 கொண்ட குடியிருப்பு பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும், செலவினத்தினை குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.68/2022/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.154**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:19**

. இந்நகராட்சிக்குட்பட்ட தர்ஹா சாலை, கீழ்க்குளம் முதல் தெரு மற்றும் நான்காம் தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.1,65,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. செலவினத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.69/2022/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.155**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:20**

இந்நகராட்சியில் இந்நகராட்சிக்குட்பட்ட பார்த்தசாரதி கோவில் சாலை , அரபிக் கல்லூரி சாலை மற்றும் குமரன் திட்டை சாலை ஆகிய சாலைகளில் PVC Pipeline பொருத்தும் பணிக்கு ரூ. 145000/- க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 69-1/2022/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.156**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:21**

பத்மனாபபுரம் நகராட்சியினுள்ள பொது பிரிவு, பொறியியல் பிரிவு, சுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் வருவாய் பிரிவுகளிலுள்ள கணனிகள் பிரிண்டர்கள், Net Work பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச தொகை ரூ.1.00 லட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:-மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 0088/2023/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.157**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:22**

இந்நகராட்சியில் 2022-2023 ஆண்டுக்கு குடிநீர் வடிகால் நிதியின் கீழ் வருடாந்திர (ANNUAL MAINTENANCE) குடிநீர்மின் மோட்டார் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 19.10.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ. எண். | பணியின்பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர்/ நிறுவனதாரர் பெயர் | விலைவிகிதம் கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1, | Annual Maintenance mini water supply pumpset works @ **Market OHT , GH OHT Distribution line areas in Padmanabhapuram Municipality 2022-2023 Zone I** | 5.00 | திரு.சி.கே.ராகேஷ் , கரைகண்டார் கோணம், மணலி | 0.1% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.சி.சந்திரசேகர் , கறுக்கன்குழி | 1.0% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | Annual Maintenance mini water supply pumpset works @ **Padmanabhapuram OHT ,Puliyoorkurichi OHT Distribution line areas in Padmanabhapuram Municipality 2022-2023 Zone II** | 5.00 | திரு.சி.கே.ராகேஷ் , கரைகண்டார் கோணம், மணலி | 1.0-% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | திரு.சி.சந்திரசேகர் , கறுக்கன்குழி | **0.1**% சதவீதம் மதிப்பீட்டை விடகுறைவு |

மேற்கண்ட பணிகளில் வரிசை எண் 1ல் காணும் பணிக்கு **0.1%** சதவீதம் மதிப்பீட்டை விட குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.சி.கே.ராகேஷ், கரைகண்டார் கோணம், மணலி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கவும் மற்றும் வரிசை எண் 2ல் காணும் பணிக்கு **0.1** %சதவீதம்மதிப்பீட்டை விட குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.சி.சந்திரசேகர், கறுக்கன்குழி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.1348/2022/இ1**

**அ.கு-மன்றம்அனுமதிக்கலாம்**

**மன்றத் தீர்மானம் எண்.158**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:23**

இந்நகராட்சியில் 2022-2023 ஆண்டுக்கு குடிநீர் வடிகால் நிதியின் கீழ் வருடாந்திர (ANNUAL MAINTENANCE ) குடிநீர் பகிர்மான குழாய் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 19.10.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ. எண். | பணியின்பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்பெயர்/ நிறுவனதாரர்பெயர் | விலை விகிதம்கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1, | Annual Maintanance mini | 5.00 | திரு.சி.கே.ராகேஷ் | 0.1% சதவீதம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | water supply pipeline works @ **Market OHT , GH OHT Distribution line areas in Padmanabhapuram Municipality 2022-2023 Zone I** | | , கரைகண்டார் கோணம், மணலி | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.சி.சந்திரசேகர் , கறுக்கன்குழி | 1.0% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | Annual Maintanance mini water supply pipeline works @ **Padmanabhapuram OHT ,Puliyoorkurichi OHT Distribution line areas in Padmanabhapuram Municipality 2022-2023 Zone II** | 5.00 | திரு.சி.கே.ராகேஷ் , கரைகண்டார் கோணம், மணலி | 1.0 % சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | திரு.சி.சந்திரசேகர் , கறுக்கன்குழி | **0.1**% சதவீதம் மதிப்பீட்டை விடகுறைவு |

மேற்கண்டபணிகளில் வரிசை எண் 1ல் காணும் பணிக்கு **0.1** %சதவீதம்மதிப்பீட்டை விட குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.சி.கே.ராகேஷ், கரைகண்டார்கோணம், மணலிஎன்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கவும் மற்றும் வரிசை எண் 2ல் காணும் பணிக்கு **0.1** %சதவீதம்மதிப்பீட்டை விட குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.சி.சந்திரசேகர், கறுக்கன்குழி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.1348-1/2022/இ1**
**அ.கு- மன்றம்அனுமதிக்கலாம்**
**மன்றத் தீர்மானம் எண்.159**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:24**

2021-2022 ம் ஆண்டு நமக்குநாமே திட்டத்தின் கீழ் கல்குளம் அரசு மேல் நிலை பள்ளியில் அமைந்துள்ள கட்டிடத்தின் தரைத்தளம் காங்கீரிட் அமைத்தல் மற்றும் தகர சீட் கொண்டு சன்சைடு அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ரூ.3.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி இப்பணிக்கு பதிலாக மாற்றுப் பணிகள் செய்து தர கல்குளம் அரசுப்பள்ளி தலைமையாசிரியர் கடிதம் வழங்கியுள்ளார். அதன்படி முன்பக்கசுவர் கட்டுதல் மற்றும் தரைக்கு டைல்ஸ் பதித்தல் ,வர்ணம் பூசுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு இப்பணியை அதேவிகிதத்தில் ஒப்பந்ததாரர் திரு.பி.ஜார்ஜ் என்பவர் மூலமாக பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1345/2022/இ1
அ.கு- மன்றம்அனுமதிக்கலாம்
**மன்றத் தீர்மானம் எண்.160**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:-25**

இந்நகராட்சிக்குட்பட்ட ஆர்.சி தெருவில் குடிநீர் அபிவிருத்தி திட்ட திட்டப்பணிக்காக தோண்டப்பட்டு சேதமடைந்துள்ளதால் சாலையினை சீரமைப்பு செய்ய பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ரூ.3.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி பதிவு ஒப்பந்ததாரர் திரு.சி.ஜெகஸ்லால் என்பவருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்ட விபரம் மன்றத்தின் தகவலுக்கு.

அ.கு- மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண்.161**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:26**

இந்நகராட்சிகுட்பட்ட ஆர்.சி தெருவில் சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் கோரிக்கையினை ஏற்று 116 மீட்டருக்கு பேவர் பிளாக்தளம்அமைக்க ரூ.6.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில்இருந்துமேற்கொள்ளமன்றத்தின்அனுமதிவேண்டப்படுகிறது.

அ.கு- மன்றம்அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 117/2023/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.162**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:27**

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மணலி ஜங்சன் பகுதியில் பயணிகள் நிழற்குடை கட்டும் பணிக்கு போதிய இடவசதி இல்லாததால் மேற்படி இப்பணியினை ரத்து செய்து மணலி சந்திப்பில் LED Mini Mass Light அமைப்பதற்கு மாற்று பணி தேர்வு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 1358/2022/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண். 163**

மாற்று பணி தேர்வு செய்ய மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:28**

இந்நகராட்சியில் 2015-2016 மற்றும் 2016-2017-ஆம் ஆண்டுகளில் வருவாய் நிதியின் கீழ் ரூ.82.95 இலட்சத்தில் 17 பணிகளும் மற்றும் 2014-2015-ஆம் ஆண்டு இடைவெளி நிரப்புநிதியின் கீழ் பத்மனாபபுரம் அலுவலக கட்டிடமான முதல் தள பணிக்கு நகராட்சி பங்களிப்பு தொகையாக மொத்தம் ரூ.80.83 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவாய் நிதியில் போதிய தொகை இல்லாததால் நாளது தேதி வரை வழங்கப்படாமல் உள்ளது.

**பணிகளின்விபரம்கீழ்க்கண்டவாறு**

| வ.எண் | பணியின்விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்த தாரர் பெயர் | ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | Providing of PaverblockAmala Convent road from NH 47 Main Road to Municipal Boundary in Ward no.17 | 7.00 | C.Jegaslal | 7.00 |
| 2 | Providing Paver block at Thittaitheru in Ward No.13 in Padmanabhapuram Municipality | 9.25 | C.Jegaslal | 9.25 |
| 3 | Providing Paver block at Mudakulam in Ward No.5 in Padmanabhapuram Municipality | 9.20 | C.Jegaslal | 9.20 |
| 4 | Providing Paver block at Village Officer Theru at Puliyookurichi in Padmanabhapuram Municipality | 3.5 | T.Ramasamy | 3.32 |
| 5 | Construction of Drainage with Coverslab at cost of Kumaracoil W.no.21 | 3.10 | Robinson | 2.74 |
| 6 | Construction of Drainage with Coverslab at cost of Vettikonam W.no.7 | 5.25 | Robinson | 3.61 |
| 7 | Providing Paver block at Dargatheru in H.No 24 to 165 to EducatiaonalSevaimaiyam Ward No.13 in Padmanabhapuram Municipality | 4.75 | Ramesh | 4.56 |
| 8 | Providing Sawage motor pumb pipeline facilities with repair works to sewage collection sumb w-16 in Padmanabhapuram Municipality | 4.50 | Johnrose | 4.50 |
| 9 | Providing Paver block at Mercantile Bank right Side in Padmanabhapuram Municipality | 3.00 | Ramadoss | 3.00 |
| 10 | Construction of Drainage with Coverslab at Puliyoorkurichi W.no.19Padmanabhapuram Municipality | 4.00 | C.Jegaslal | 0.76 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | Construction of Drainage with Coverslab near chettitheru to nna Colony W.5 Padmanabhapuram Municipality | 3.50 | Bright Robinson | 3.38 |
| 12 | Providing Construction of culvert and drainage of cover slab at konartheru w.no 5 in Padmanabhapuram Municipality | 2.5 | Bright Robinson | 0.76 |
| 13 | Construction Of Drainage with cover slaband laying paver block @ Mathavilasm | 5.75 | JohnRose | 5.69 |
| 14 | Providing Paver block at Gnaniyartheru and Chekalatheru cross in ward.no9 | 4.90 | John justus | 4.90 |
| 15 | Construction of side wall and providing Paverblock from Velappan house to Nagarajan House @Panicar street | 6.00 | Ramadoss | 5.58 |
| 16 | Maintanace of Market & toilet in Padmanabhapuram Municipality | 1.75 | P.Robinson | 1.58 |
| 17 | Construction of storm water drainage at panicar street from EB pole F1/47 to wards door no.7/57D in ward no .17 in Padmanabhapuram Municipality | 5.00 | MichealYes uraj | 5.00 |
| | **Infra gap Filling Fund 2014-2015** | | | |
| 18 | Construction of Office Building @First floor inPadmanabhapuram Municipality | 50.00 | Bright Robinson | 6.00 |
| | **Total** | **132.95** | | **80.83** |

தற்போது வரி வருவாய் வசூலாவதை கருத்தில் கொண்டு பணிகளுக்கு பகுதி பகுதியாக தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- நடப்பு நிதியாண்டில் ரூ. 30.00 இலட்சம் வரை ஒதுக்கீடு செய்து பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் தொகை வழங்கிட அனுமதிக்கலாம். மீதி தொகையினை அடுத்த நிதியாண்டில் வழங்கிடவும் அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண்.164**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:-29**

இந்நகராட்சியில் மண்சாலைகள் மேம்படுத்துதல் மற்றும் 5 ஆண்டுகள் முடிவுற்ற சாலைகளை புதுப்பித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு சாலைகள் தேர்வு செய்யப்பட்டு ஆய்விற்காக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.தேர்வு செய்யப்பட்ட சாலைகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

| S.No | Name of the Work | Tentative Estimate Amount in Lakhs |
|---|---|---|
| 1 | Restoration of Concrete Pavement in Manali Street 3 | 6.00 |

| | | |
|---|---|---|
| 2 | Restoration of Concrete Pavement in Vettukattuvilai Street 1 | 6.20 |
| 3 | Restoration of Concrete Pavement in Valiyavilai 1A | 7.00 |
| 4 | Restoration of Concrete Pavement in Kumpiparai 1 | 2.50 |
| 5 | Restoration of Concrete Pavement in Kumpiparai 2 | 4.50 |
| 6 | Restoration of Concrete Pavement in Grave Yard Road 1 | 4.00 |
| 7 | Restoration of Concrete Pavement in Grave Yard Road 2 | 6.00 |
| 8 | Restoration of Concrete Pavement in Keezhakulam Street 6 | 11.00 |
| 9 | Restoration of Concrete Pavement in Gnaniyar Street 2 | 12.00 |
| 10 | Restoration of Concrete Pavement in Gnaniyar Street 3F | 3.00 |
| 11 | Restoration of Concrete Pavement in Vettikonam Street 4 | 3.20 |
| 12 | Restoration of Concrete Pavement in Vettikonam Street 4B | 3.00 |
| 13 | Restoration of Concrete Pavement in Chekkalai Street | 3.60 |
| 14 | Restoration of Concrete Pavement in RC Street 7 | 3.40 |
| 15 | Restoration of Concrete Pavement in Pattanikulam Street 5 | 8.70 |
| 16 | Restoration of Concrete Pavement in Vivekanandha Street | 3.00 |
| 17 | Restoration of Concrete Pavement in Pattanikulam Street 1 | 11.00 |
| 18 | Restoration of Concrete Pavement in North Street 9A | 3.00 |
| 19 | Restoration of Concrete Pavement in South Street 1 | 3.20 |
| 20 | Restoration of Concrete Pavement in Vandithadam 4 | 5.00 |
| 21 | Restoration of Concrete Pavement in Arasuvilai Road 1 | 10.00 |
| 22 | Restoration of Concrete Pavement in Ramanparambu Lane 10 | 6.00 |
| 23 | Restoration of Concrete Pavement in Mullai Nagar Street 1 | 8.60 |
| 24 | Restoration of Concrete Pavement in Ramanparambu Road 2 | 11.00 |
| 25 | Restoration of Concrete Pavement in Ramanparambu Street 1 | 9.50 |
| 26 | Restoration of Concrete Pavement in Padmanabhan Street 1 | 8.50 |
| 27 | Restoration of Concrete Pavement in Vazhavilai Temple Street | 3.90 |
| 28 | Restoration of Concrete Pavement in Asan Kinaru Street 4 | 2.20 |
| 29 | Restoration of Concrete Pavement in Bharathi nagar | 21.00 |
| 30 | Restoration of Concrete Pavement in Market Road I | 15.00 |

| | | |
|---|---|---|
| 31 | Restoration of Concrete Pavement in Market Street 9 | 2.10 |
| 32 | Restoration of Concrete Pavement in Panavilai street 1 | 3.00 |
| 33 | Restoration of Rubberised interlocking Paver block in Puthukaduvettivilai 2 | 3.00 |
| 34 | Restoration of Rubberised interlocking Paver block in Krishnapuram Road | 4.70 |
| 35 | Restoration of Rubberised interlocking Paver block in North Street 4 | 3.00 |
| 36 | Restoration of Rubberised interlocking Paver block in Perumal kovil Street 6 | 1.30 |
| 37 | Restoration of Rubberised interlocking Paver block in Eraniel Road street 2 | 3.30 |
| 38 | Restoration of Rubberised interlocking Paver block in Kuttakarai Road | 2.45 |
| 39 | Restoration of Rubberised interlocking Paver block in Kumaribalan Street | 15.30 |
| 40 | Restoration of Rubberised interlocking Paver block in Saravalai Street 1 | 0.50 |
| 41 | Restoration of Rubberised interlocking Paver block in Kalpadi Street 2 | 2.80 |
| 42 | Restoration of Rubberised interlocking Paver block in Manali Street 8 | 2.75 |
| 43 | Restoration of Rubberised interlocking Paver block in Saralvilai Road | 17.75 |
| 44 | Restoration of Concrete Pavement in Saralvilai Street 4 | 0.80 |
| 45 | Restoration of Rubberised interlocking Paver block in Saralvilai Street 3 | 1.85 |
| 46 | Restoration of Rubberised interlocking Paver block in Thaikkapalli 6 | 1.20 |
| 47 | Restoration of Rubberised interlocking Paver block in Thaikkapalli 1 | 9.20 |
| 48 | Restoration of Rubberised interlocking Paver block in Saralvilai Street 2 | 2.70 |
| 49 | Restoration of Rubberised interlocking Paver block in Thaikkapalli 4 | 4.30 |
| 50 | Restoration of Concrete Pavement in Thaikkapalli 7 | 1.50 |
| 51 | Restoration of Concrete Pavement in Thaikkapalli 2 | 2.70 |
| 52 | Restoration of Rubberised interlocking Paver block in Chundavilai Street 2 | 2.20 |
| 53 | Restoration of Concrete Pavement in Thaikkapalli 2a | 3.00 |
| 54 | Restoration of Concrete Pavement in Gnaniyar Street 2 | 13.15 |
| 55 | Restoration of Rubberised interlocking Paver block in APMA Street 1D | 1.40 |
| 56 | Restoration of Rubberised interlocking Paver block in APMA Street 1B | 0.50 |
| 57 | Restoration of Rubberised interlocking Paver block in APMA Street 2A | 0.60 |
| 58 | Restoration of Concrete Pavement in Gnaniyar Street 3F | 2.80 |
| 59 | Restoration of Concrete Pavement in Market | 1.20 |

| | | |
|---|---|---|
| | Street 5 | |
| 60 | Restoration of Concrete Pavement in Market Street 6 | 1.20 |
| 61 | Restoration of Concrete Pavement in Market Street 7 | 3.60 |
| 62 | Restoration of Rubberised interlocking Paver block in Market Road 2 | 16.40 |
| 63 | Restoration of Concrete Pavement in Gandhi Nager 2B | 4.80 |
| 64 | Restoration of Rubberised interlocking Paver block in Bharathi Nagar Road | 18.45 |
| 65 | Restoration of Concrete Pavement in Kumaran Veethi 1 | 9.50 |
| 66 | Restoration of Concrete Pavement in Padmanabhan Street 1 | 8.40 |
| 67 | Restoration of Concrete Pavement in Konar Street 4 | 3.70 |
| | **TOTAL** | **382.10** |

**மன்றத் தீர்மானம் எண்.165**

பார்வையிடப்பட்டது.

**பொருள் எண்:-30**

15-வது நிதிக்குழு மான்யம் 2022-2023-ன் கீழ் புதிதாக 331 எண்ணம் தெருவிளக்குகள் கொள்முதல் செய்ய 19/12/2022 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரு தகுதியான ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| **வ.எண்.** | **நிறுவனத்தின் பெயர்** | |
|---|---|---|
| 1 | Akash Engineering Associates (P) Ltd.,<br>No. 16 North wall road,<br>Koudi Thoppu. Chennai -79. | 6.91 சதவீதம் அதிகம் |
| 2 | Schnell energy Equipments (P) Ltd., Chennai<br>6/4 Renganayagi Nagar,<br>Periyanayakkam Palayam,<br>Coimbatore - 641 020. | 16.05 சதவீதம் அதிகம் |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தம் கொடுத்துள்ள Akash Engineering Associates (P) Ltd., நிறுவனத்திடம் ஒப்பந்தப்புள்ளி விலை குறைப்பு கோரி பேச்சுவார்த்த அறிவிப்பு கடிதம் (Negotation

Letter ) வழங்கப்பட்டதில் வ.எண். 1-ல் காணும் நிறுவனத்தார் 0.10 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக செய்ய சம்மதம் கொடுத்துள்ளார். எனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Akash Engineering Associates (P) Ltd., க்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது மன்றத்தின் தகவலுக்கு.

(ந.க.எண். இ1/1289-1/2022)

**மன்றத் தீர்மானம் எண்.166**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:-31**

மாநில நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு நிதி 2022-2023-ன் கீழ் 1278 எண்ணம் பழைய தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றுவதற்கும் மற்றும் 324 எண்ணம் புதிய LED விளக்குகளாக மாற்றுவதற்கும் 28/12/2022 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரு தகுதியான ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | |
|---|---|---|
| 1 | Akash Engineering Associates (P) Ltd.,<br>No. 16 North wall road,<br>Koudi Thoppu. Chennai -79. | 5.66 சதவீதம் அதிகம் |
| 2 | Schnell energy Equipments (P) Ltd.,<br>6/4 Renganayagi Nagar,<br>Periyanayakkam Palayam,<br>Coimbatore - 641 020. | 10.66 சதவீதம் அதிகம் |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தம் கொடுத்துள்ள Akash Engineering Associates (P) Ltd., நிறுவனத்திடம் ஒப்பந்தப்புள்ளி விலை குறைப்பு கோரி பேச்சுவார்த்த அறிவிப்பு கடிதம் (Negotation Letter ) வழங்கப்பட்டதில் வ.எண். 1-ல் காணும் நிறுவனத்தார் 0.10 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக செய்ய சம்மதம் கொடுத்துள்ளார். எனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Akash Engineering Associates (P) Ltd., க்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது மன்றத்தின் தகவலுக்கு.

(ந.க.எண். இ1/1349/2022)

**மன்றத் தீர்மானம் எண்.167**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:-32**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண். 12384/42/2022 நாள் 20/01/2023-ன் படி இந்நகராட்சியில் பெறப்பட்ட கடன்கள் யாவும் நகராட்சியின் சொந்த வருவாய் நிதி மற்றும் அனுமதிக்கப்படும் மான்யத்திலிருந்து 31/03/2023-க்குள் செலுத்தி கடன் இல்லா நகராட்சி(Loan Free ULB) என அறியப்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் பெறப்பட்டுள்ள கடன் விவரம் கீழ்கண்டவாறு.

| வ.எண். | கடன் பெற்ற நிறுவனம் | திட்டத்தின் பெயர் | 31/12/2022 ல் செலுத்த வேண்டிய கடன் நிலுவை தொகை ரூ. |
|---|---|---|---|
| 1, | TUFIDCO | சிறப்பு சாலை திட்டம் | 51,78,066/- |
| 2 | TNUIFSL | கூட்டு குடிநீர் பணிகள் | 5,47,00,000/- |
| 3 | - | மின் கட்டணம் | 63,48,698/- (30/11/2022 வரை) |
| 4 | - | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | 1,41,00,000/- (31-10-2022 வரை) |
| | | மொத்தம் | ரூ. 8,03,26,764/- |

அ.கு:- மேற்படி செலுத்தப்பட வேண்டிய நிலுவை விபரம் மன்றத்தின் பார்வைக்கு, மேலும் கடன் தொகை,மின் கட்டணம், கூட்டு குடிநீர் திட்ட கட்டணம் செலுத்திட தேவையான நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண்.168**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:-33**

தக்கலை பேருந்து நிலையத்தில் பயணிகள் வசதிக்காக இருக்கைகள் அதிகப்படுத்த கேட்க மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு காலாண்டு கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்ட தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் கோரிக்கை

வைக்கப்பட்டுள்ளது. எனவே தக்கலை பேருந்து நிலையத்தில் பயணிகள் வசதிக்காக கூடுதல் இருக்கைகள் அமைக்கவும், அதற்காகும் செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண்.169**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.
**பொருள் எண்:-34**

இந்நகராட்சிக்குட்பட்ட பனவிளை பகுதியில் சுமார் 20 குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகின்றனர். இப்பகுதி வழிப்பாதையில் நகராட்சி கிணறு மூலம் பொதுமக்கள் தண்ணீர் எடுத்து பயன்பெறுகின்ற நிலையில் மேற்படி கிணற்றுக்கு அருகில் சுவர் ஒன்று பாதுகாப்பற்ற நிலையில் பொதுமக்களுக்கு வழிப்பாதைக்கு இடையூறாக உள்ளது.மேற்படி சுவரினை அப்புறப்படுத்தக் கேட்டு பொதுமக்கள் கொடுத்துள்ள மனு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு- போக்குவரத்திற்கு பாதுகாப்பற்ற சுவரை அப்புறப்படுத்தி போக்குவரத்திற்கு வாய்ப்பு ஏற்படுத்தி பொதுமக்கள் செலவில் மீண்டும் சுவர் அமைத்து கொடுக்க சம்மதம் பெற்று அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண்.170, நாள் 31/01/2023**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்:-35**

பத்மனாபபுரம் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் ஆண்டுக் கணக்குகள் Online வழியாக செய்யப்பட வேண்டும். இந்நகராட்சியில் கணக்குகள் பகுதி கையால் எழுதப்படும் (Manual), பகுதி Online வழியாகவும் செய்யப்பட்டு வருகிறது. இதனால் வரவு செலவு கணக்குகள் சரிவர இல்லாமல் உள்ளதால் 2021 - 2022 மற்றும் **2022 - 2023**-ஆம் ஆண்டிற்கான கணக்குகள் வெளிக்கொணர்வு பணியாளர் மூலம் பணியினை செய்திட உத்தேச செலவுத் தொகை ரூ.**50000**/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு - மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றத் தீர்மானம் எண்.171**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.
**பொருள் எண்:-36**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மூலம் வீடு வீடாக குப்பை சேகரம் செய்யும் தள்ளுவண்டி 2 எண்ணம் வாங்க கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளி மன்றத்தின் ஒப்புதலுக்கு. மேலும் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.32000/- ஆகும். மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Penduline Joe (OPC) Pvt Ltd | 16000/- |
| 2 | Banumathi Welding Industries | 21000/- |

அ.கு - மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண்.172</u>**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**<u>பொருள் எண்:-37</u>**

அரசாணை (நிலை) எண்.10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நாள் 23.01.2023-ன் படி நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியிடங்களுக்கான வரையறை நிர்ணயம் செய்து அதற்கேற்ப புதிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் ஏற்கனவே உள்ள பணியிடங்களை முறைப்படுத்துதல் குறித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்

அ.கு - மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**<u>மன்றத் தீர்மானம் எண்.173</u>**
பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்:-38</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7,கதவு எண்.60D-1 என்ற குடியிருப்பு குடிநீர் குழாய் இணைப்பு எண்151/007/900428 என்ற இணைப்பு வீட்டு உபயோக இணைப்பாக இல்லாமல் வணிக பயன்பாட்டில் உள்ளது.மேற்படி வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அறிக்கையின்படி மேற்கண்ட குடிநீர் குழாய் இணைப்பு எண்151/007/900428-னை வீட்டு உபயோக இணைப்பாக மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு - மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றத் தீர்மானம் எண்.174</u>**
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

ஒப்பம்/-

நகர் மன்றத் தலைவர்,
பத்மனாபபுரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.